முழுப்பதிப்புரிமையுடையது

அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2020

## 43 - சித்திரம்

## புள்ளியிடும் திட்டம்

Department of Examinations - Sri Lanka



இது விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

# 43 – சித்திரம்

## இறுதிப் புள்ளி கணித்தல்

### பகுதி I

40 பல்தேர்வு வினாக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதன்பொருட்டு ஓவ்வொரு வினாவுக்கும் ஒரு புள்ளி வீதம் வழங்கப்படுகிறது. (40 × 1) 40 புள்ளிகள்

### பகுதி II

பொருட் கூட்டம் பார்த்து வரைதல் எனும் வினா வழங்கப்பட்டுள்ளது.
இதன்பொருட்டு 6 நியதிகளாக பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றிற்கும் 5 புள்ளிகள் வீதம் வழங்கபப்படுகிறது. (6 × 5) 30 புள்ளிகள்

### பகுதி III

இது கருத்துவெளிப்பாடு, ஆக்க அலங்காரம், கிரபிக் சித்திரம் என மூன்று பகுதிகளாகக் காணப்படுகிறது. இதன்பொருட்டு அவற்றுள் ஒன்றினை தெரிவு செய்து வரையப்பட வேண்டும். இதற்கு 5 நியதிகளின் அடிப்படையில் 06 புள்ளிகள் வீதம் வழங்கப்படுகிறது (5 × 6) 30 புள்ளிகள்

முழு மெத்தப் புள்ளிகள் 100

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

# க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2020

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடலுக்கான பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. சகல உதவிப் பரீட்சகர்களும் விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற மைப் பேனாவை பயன்படுத்தவும்.
2. பிரதம பரீட்சகர் ஊதாநிற மைப்பேனாவைப் பயன்படுத்த வேண்டும்.
3. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
4. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, ஒப்பம் இடவும்.
5. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பின்னங்களாக பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.
6. எண்கணித பரிசோதகர் புள்ளிகளைச் சரிபார்ப்பதற்கு நீல அல்லது கறுப்பு நிறமைப் பேனாவைப் பயன்படுத்த வேண்டும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ............................................................................................
............................................................................................ ✓ $\frac{4}{5}$
............................................................................................

(ii) ............................................................................................
............................................................................................ ✓ $\frac{3}{5}$
............................................................................................

(iii) ............................................................................................
............................................................................................ ✓ $\frac{3}{5}$
............................................................................................

**மொத்தம்** ⟶ $\frac{10}{15}$

Department of Examinations - Sri Lanka

**பல்தேர்வு விடைத்தாள்**

**1. துளைத்தாள் தயாரித்தல்**

I. புள்ளி வழங்கும் திட்டத்தின் படி சரியான தெரிவைத் துளைத்தாளில் அடையாளமிடவும்.

II அவ்வாறு அடையாளமிடப்பட்ட இடத்தை வெட்டி நீக்கித் துளைத்தாளைத் தயாரிக்கவும்.

III துளைத்தாளை விடைகளின் மீது சரியாக வைத்துக்கொள்ளக்கூடியதாகச் சுட்டெண் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான விடைகளின் எண்ணிக்கையைக் காட்டும் அடைப்பையும் வெட்டி நீக்கவும்.

IV சரியான, பிழையான விடைகளை குறிப்பிடக்கூடியதாக ஒவ்வொரு வரிசைக்கும் இறுதியில் வெற்று நிரையொன்றை வெட்டி ஏற்படுத்திக் கொள்ளவும்.

V **வெட்டிக்கொண்ட துளைத்தாளில் பிரதம பரீட்சகரிடம் கையொப்பம் பெற்று அங்கீகரித்துக் கொள்ளவும்.**


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.

3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை × அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் எழுதவும். அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும். புள்ளி பரிவர்த்தனை செய்யும் சந்தர்ப்பங்களில் பரிவர்த்தனை செய்யப்பட்ட புள்ளியை உரிய கூட்டினுள் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை மற்றும் கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். **பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.**
2. புள்ளிகளை குறிப்பிடும்போது ஓவலண்ட் கடதாசியின் வலது பக்க நிரலைப் பயன்படுத்தவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக **2 இலக்கங்களில் பதியவும்.** வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதவும்.

✶ **புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

I. ஒரு வினாப்பத்திரம் மாத்திரம் உள்ள பாடங்கள் தவிர ஏனைய சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது.

II. ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியான புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும்.

III. வினாப்பத்திரம் I இற்கான புள்ளி புள்ளிப்பட்டியலில் "**Total Marks**" என்ற நிரலில் **பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும்.**

IV. வினாப்பத்திரம் II இற்கான புள்ளிப் பட்டியலை தயார் செய்யும்போது பகுதிப் புள்ளிகளைப் பதிவதோடு வினாப்பத்திரம் II இன் இறுதிப் புள்ளிகளை புள்ளிப் பட்டியலில் "**Total Marks**" என்ற நிரலில் பதியவும்.

V. 43 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து **எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.**

VI. 21 – சிங்களமொழியும் இலக்கியமும், 22 – தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய இரு பாடங்களும் வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளி புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். வினாப்பத்திரம் II, III இற்கான பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி அவ் வினாப்பத்திரத்தின் மொத்தப் புள்ளிகளை, புள்ளிப்பட்டியலில் பதிய வேண்டும்.

**முக்கிய குறிப்பு :**

I. சகல சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய முழுப்புள்ளியானது முழுத்தானத்தில் புள்ளி பட்டியலில் பதியப்படுதல் வேண்டும். எந்தவிதமான காரணங்களிற்காகவும் வினாப்பத்திரத்தின் இறுதிப்புள்ளியானது தசம தானங்களில் பதியப்படலாகாது.

II. புள்ளிப் பட்டியலின் சகல பக்கங்களிலும் புள்ளிகளைப் பதிந்து உதவிப் பரீட்சகர், புள்ளிகளை சரிபார்த்த உதவிப் பரீட்சகர், மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் எண்கணித பரீட்சகர் மற்றும் பிரதம பரீட்சகர் தமது குறியீட்டு இலக்கத்தை எழுதி கையொப்பமிட்டு உறுதிப்படுத்துவது கட்டாயமாகும்.

ooo

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
# கல்விப் பொதுத்தராதர பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2020

## 43 – சித்திரம் 1,11,111
## புள்ளி வழங்கும் திட்டம்

சித்திரம் 1 : குறு வினாக்கள் 40 இனைக் கொண்ட பத்திரமாகும். வினாப் பத்திரத்திலேயே விடை எழுதுவதற்கு ஏற்றவகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. சரியான விடைக்கு ஒரு புள்ளி வீதம் 40 புள்ளிகள் கிடைக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

சித்திரம். 11 : செயன்முறை வினாப்பத்திரம். இதில் ஒரு செயற்பாட்டைக் கொண்ட வினா அடங்கியுள்ளது. அசையாப் பொருட்கூட்டம் சுயாதீன இரேகை வரைதல் என இவ்வினாப்பத்திரம் அறியப்படும். இவ்வினாப்பத்திரத்திற்கு 30 புள்ளிகள் கிடைக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

சித்திரம் 111 : இது ஒரு செயல்முறை வினாப்பத்திரமாகும். இது அ, ஆ, இ என மூன்று பகுதிகளைக் கொண்டிருக்கும்.

அ. கருத்துவெளிப்பாட்டுச் சித்திரம்

ஆ. ஆக்க அலங்கார சித்திரம்

இ. கிரபிக் சித்திரம்

மேற்படி தலைப்புக்களில் ஏதாவதொன்றை தெரிவு செய்து வரைந்து வர்ணம் தீட்டுதல் வேண்டும். இதற்கு 30 புள்ளிகள் கிடைக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

சித்திரக்கலை வினாப்பத்திரம் பகுதி I, II, II ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. இதில் ஒவ்வொரு பகுதிக்கும் புள்ளி வழங்கும் திட்டம் வெவ்வேறு விபரப் புள்ளித் தாள்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. I பகுதிக்குரிய புள்ளிகளை கறுப்பு நிற விபரப்புள்ளித்தாளின் முதலாம் புள்ளி நிரலிலும் பகுதி II இற்குரிய புள்ளிகளை அடுத்த கறுப்பு நிற விபரப் புள்ளித்தாளின் இரண்டாம் பகுதி நிரலிலும் பகுதி III இற்குரிய புள்ளிகளை சிவப்பு நிற விபரப் புள்ளித்தாளின் மூன்றாம் பகுதிக்குரிய நிரலிலும் பதிய வேண்டும் என்பதை கருத்தில் கொள்க. இறுதிப் புள்ளியைத் தீர்மானிப்பதில் பரீட்சகர்கள் கவனம் எடுக்க வேண்டிய அவசியமில்லை.

30க்கு புள்ளியிடும் போது நூறிற்கு எத்தனை என தீர்மானித்து புள்ளியிட வசதியாக கீழே தரப்பட்டுள்ள அட்டவணை அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1.- 01,02,03 | 11.- 34,35,36,37, | 21. – 68,69,70 |
| 2. – 04,05,06,07, | 12. - 38,39,40 | 22.- 71,72,73 |
| 3.- 08,09,10, | 13.- 41,42,43 | 23.- 74,75,76,77 |
| 4. 11,12,13, | 14.- 44,45,46,47 | 24.- 78,79,80 |
| 5.- 14,15,16,17 | 15.- 47,49,50 | 25.- 81,82,83 |
| 6.- 18,19,20 | 16.- 51,52,53, | 26.- 84,85,86,87 |
| 7.- 21,22,23, | 17.- 54,55,56,57 | 27.- 88,89,90 |
| 8.- 24,25,26,27, | 18.- 58,59,60 | 28.- 91,92,93 |
| 9.- 28,29,30 | 19.- 61,62,63, | 29.- 94,95,96,97 |
| 10.-31,32,33 | 20.- 64,65,66,67 | 30.- 98,99,100, |

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

சித்திரம் பத்திரம் 1.
நோக்கம் :-

1. செய்முறையினூடாகப் பெறப்பட்ட அறிவுத் திறன், நுட்பமுறை என்பவற்றினால் போசிக்கப்பெற்ற திறன்களையும், சிறப்புத் தன்மைகளையும் பரீட்சித்து அளவிடுதல்.
2. பாரம்பரிய கலைநிர்மாண முறை, சிற்ப முறை, அலங்கரிக்கும் தன்மை, மூலப்பொருட்களின் உபயோகமும் அதனுடன் தொடர்புபட்ட பிரதேசம் பற்றி பெறப்பட்ட அறிவுத் திறனை பரீட்சித்தல்.
3. புகழ் பெற்ற கலைஞர்களையும், அவர்களது கலையாக்கங்கள் பற்றியும் அறிந்து கொள்ளுவதுடன் அவற்றின் பின்னணி ஊடாக பயன்படும் தொனிப்பொருள், ஊடகப்பயன்பாடு, நுட்பமுறை, உணர்ச்சி வெளிப்பாடு தொடர்பான மதிப்பீட்டினையும் இரசனைத் தன்மையினையும் பரீட்சித்தல்
4. இலங்கை, இந்தியா, ஐரோப்பா தொடர்புடைய கலாச்சாரப்பின்னணி பற்றிய அறிவையும் அது தொடர்புடைய திறன்களையும் பரீட்சித்தல்

<u>**பத்திரம்**</u> - 1 க்கு வினாப்பத்திரத்திலேயே விடையளிக்கக் கூடிய வகையில் இப்பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது. 40 வினாக்களைக் கொண்ட இப்பத்திரத்தில் சரியான ஒரு விடைக்கு ‘ ✓ ‘ என்றும், பிழை எனின் ‘X’ என்றும் அடையாளம் இடுதல் வேண்டும். புள்ளியிடும் போது சிவப்பு மையினை பாவித்தல் வேண்டும். ஒவ்வொரு வினா இலக்கத்திற்கு முன்னால் சரி ‘ ✓ ‘, பிழை‘X’ எனும் குறியீட்டினை இடுக. பரீட்சார்த்தி ஏதாவதொரு வினாவிற்கு விடையளிக்காத பட்சத்தில் அவ்வினாவில் உள்ள புள்ளிக் கோட்டின் மீது சிவப்பு மையினால் கோடிட்டு ‘X’ எனும் குறியீட்டை இடுக. வினாப் பத்திரத்திலுள்ள வினாக்கள் பல்வேறு வகையினைக் கொண்டதாக தயாரிக்கப்பட்டுள்ளது. படங்கள் ஊடாக விடைகளை ஆராயவும், படங்களை தொடர்புபடுத்தவும், கலையாக்கம் மதிப்பிடுதல் தொடர்பான பல்தேர்வு வினா, இடைவெளிகளை நிரப்புதல், படங்களை கருத்துடன் தொடர்புபடுத்துதல் போன்ற பல்வேறு வகையான வினாக்களைக் கொண்டுள்ளது.

பாடத்திட்ட உள்ளடக்கத்திலிருந்து தயாரிக்கப்பட்ட வினாக்கள் இலகுவானதாக இருந்து முறையாக கடினமானவைகளாக அமைவது வினாத்தாளின் தன்மையாகும். பாடத்திட்டத்திற்கு அமைவாகக் கற்று பரீட்சைக்கு தோற்றும் சகல பரீட்சார்த்திகளும் பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களைக் கற்று உரிய நோக்கங்களையும் திறன்களையும் பெற்று இருப்பர் எனும் நோக்கத்தில் இவ்வினாப் பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது. மாணவர் அந்நிலையினை அடைந்துள்ளதும் அல்லது இல்லாததும் வகுப்பறைச் செயற்பாட்டிலேயே தங்கியுள்ளது.

இம்முறை வினாப்பத்திரத்தின் தன்மை சிறிது மாற்றம் அடைந்துள்ளது போன்று காணப்படினும் விடய உள்ளடக்கத்தில் எவ்வித மாற்றமும் இடம் பெறவில்லை. இது வினாப்பத்திரத்தின் குணப் பண்பின் மேம்பாட்டின் பொருட்டு மேற்கொண்ட முயற்சியாகும். வகுப்பறை கற்பித்தல் செயற்பாட்டில் மாற்றங்களை ஏற்படுத்தும் உத்தியாகும். ஒரே முறையில் அமையும் வினாப்பத்திரங்களுக்கு விடையளிக்கும் செயற்பாட்டை மாற்றி எந்தவொரு சவாலுக்கும் முகம் கொடுக்கும் வகையில் மாணவர்களை தயார்படுத்தல் வேண்டும்.

வினாப் பத்திரத்தின் பெரும்பாலான வினாக்களுக்கு விடயத்திற்கு ஏற்ப விடையளிக்கலாம் பரீட்சார்த்திகள் தமது இரசனை, திறமை என்பவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து விடையளித்தல் வேண்டும். ஆனால் பரீட்சார்த்திகளால் விளக்கமற்ற முறையில் பலவிதமான விடைகள் அளிக்கப்படுகின்றது. சில விடைகள் அர்த்தமற்றும் எந்தவொரு கலையாக்கமாக ஒப்பிடக்கூடிய விடையாக இல்லாதிருப்பதுடன் அவை கொடுக்கப்பட்ட கலையாக்கம் தொடர்பாக விளக்கமற்று எழுதப்பட்டுள்ளமை வெளிப்படையாக தெரிகின்றது. சில பரீட்சார்த்திகள் கலையாக்கத்தை தெளிவாக விளங்கிக் கொள்ளாமல் அதல் காணப்படுபவை பற்றி விளக்கும் நிலைமைகளும் காணப்படுகின்றது. மதிப்பீடு என்பது கலையாக்கத்தை இனங் காணலும், அதன் கலைப் பெறுமானத்தினை விளங்கி இரசனையுடன் விமர்சித்தலாகும். கலையாக்கத்தை பாண்டப் பொருளாகக் கருதி விமர்சித்தல் மதிப்பீடு அல்ல. ஆகையினால் புள்ளி வழங்கும் போது கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும்.

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

விடை

- ❖ தூரதரிசனம் என்பது சித்திரக்கலை இலட்சணமாகும்.
- ❖ சித்திரக் கலைஞர்கள் சித்திரம் வரையும் போது தூரதரிசனத்தை பயனபடுத்துவர்
- ❖ தூரதரிசனம் என்பது சித்திரக்கலையின் ஓர் அங்கமாகும். (இங்கு இதன் கருத்து பொருத்தமாக தெளிவாக்கப்படவில்லை. எனவே புள்ளி வழங்க முடியாது)
- ❖ தூரதரிசனம் என்பது முன்னால் உள்ள பொருட்கள் பெரிதாகவும் தூரத்தில் உள்ள பொருட்கள் சிறிதாகவும் தெரிதல் என்பதை குறிப்பதாகும்.
- ❖ தூரதரிசனம் என்பது தூர சமீப தன்மையைக் காட்டுவது. (முதல் வழங்கப்பட்ட விடை சிறப்பானது எனினும் இரண்டாவது விடையும் சாதாரணமானதாகும்).

வினா இலக்கம் 36-40 வரை மதிப்பிடும் போது சுதந்திரமாக விடையளிக்கப்பட சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. இருந்த போதிலும் பரீட்சார்த்திகள் பல்வேறுபட்ட விடைகளை வழங்கியிருப்பதை காணக் கூடியதாக உள்ளது. எனினும் சில பரீட்சார்த்திகள் கலையாக்கத்தை இனங்கண்டு கொள்ளாமல் அதில் உள்ள சில அம்சங்களை மட்டும் எழுதுவதைக் காணக்கூடியதாக உள்ளது. மதிப்பீடு என்பது கலையாக்கத்தை இனங்கண்டு அதன் பெறுமதியை இரசனையுடன் விமர்சித்தலாகும். கலையாக்கத்தை ஒரு பொருளாகக் கருதி மதிப்பீடு செய்வது மதிப்பீடு அல்ல. இவ்வினாவுக்கு விடையளிக்கையில் ஐந்து தேர்ச்சிகளையும் அடிப்படையாகக் கொண்டு விடையளித்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முதலில் பரீட்சார்த்தி கலையாக்கத்தை இனங்கண்டு கொள்ளல் வேண்டும். பின்னர் கொடுத்துள்ள கலையாக்கம் பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அலகுகளுடன் தொடர்பு உள்ளதை அறிந்திருத்தல் அவசியம். அத்துடன் அதன் கருப்பொருள் நுட்பமுறை ஊடகப் பயன்பாடு உணர்ச்சி வெளிப்பாடு ஆகியவை வெளிப்படுத்தும் வகையில் விமர்சித்தல் வேண்டும். ஐந்து தேர்ச்சிகளினடிப்படையில் விடை அளிக்கபபட்டிருத்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ் வினாப்பத்திரத்தில் இது போன்ற குறிக்கோளின் அடிப்படையில் விடையளிப்பதற்கு வழி வகுத்திருப்பது சிறந்த எடுத்துக்காட்டாகும். இது புள்ளிகள் வழங்குவதற்கு இலகுவானதாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. குறிக்கோளிலிருந்து மாறுபட்டு அளிக்கப்படும் விடைகளுக்கு புள்ளி வழங்குவதை தவிர்த்துக் கொள்ளவும்.

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**43 T I**

| வினாத்தாள் | புள்ளிகள் |
|---|---|
| I | |

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Ord. Level) Examination, 2020

| | |
|---|---|
| பரீட்சகர் 1 | |
| பரீட்சகர் 2 | |
| எண்கணிதப் பரிசோதகர் | |

චිත්‍ර I
சித்திரம் I
Art I

පැය එකයි
ஒரு மணித்தியாலம்
One hour

சுட்டெண் :................................

✻ எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.

- கீழே தரப்பட்டுள்ள ஒளிப்படத்தைப் பயன்படுத்தி 1 தொடக்கம் 5 வரையான வினாக்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புக.



1. கம்பளைக் காலத்துக்குரிய இக்கட்டடக்கலை நிர்மாணிப்பு ...................................... விகாரைத் தொகுதிக்கு உரியதாகும்.

2. இக்கட்டடக்கலைப் படைப்பு ................................................ கலைஞரால் உருவாக்கப்பட்டதாகும்.

3. இது தென்னிந்திய ............................................ கட்டடக்கலைப் பண்புகளை எடுத்துக்காட்டுகின்றது.

4. இதன் தனித்துவமாய் அமைவது ........................................................ ஊடகத்தினால் ஆக்கப்பட்டிருக்கின்றமையாகும்.

5. இக் கட்டடத்தின் ................................................... இல் காணத்தக்க நடனமாடுபவர்களையும் இசைக்கருவிகள் இசைப்பவர்களையும் எடுத்துக்காட்டும் சிற்பம், உயிர்ப்பானதும் அசைவுகளைக் கொண்டதுமாகக் காணப்படுகின்றது.

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

● 6 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

**6.** இந்துக் கோயில்களில் யானை, குதிரை, சிங்கம் ஆகிய பிராணிகளை இணைத்து தூண்களோடு இணைந்ததாக நிர்மாணிக்கப்படும் சிலை வடிவம் யாது?

.................................................................................................................................

**7.** 'பரதுக்க துக்கித்த முத்திரை' சித்திரிக்கப்படுவதாகக் கருதப்படும் கல்லினாலான பாறையோடு இணைந்த நின்றநிலை புத்தர் சிலை எது?

.................................................................................................................................

**8.** யாழ்ப்பாண சட்டநாதர் சிவாலயத்தில் வரையப்பட்டிருந்த 'வெள்ளைச் சேவல்' என்ற ஓவியத்தை வரைந்த கலைஞர் யார்?

.................................................................................................................................

**9.** சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட 'நடன மாது' உருவ நிர்மாணிப்பில் பயன்படுத்தப்பட்டுள்ள கலைநுட்பம் யாது?

.................................................................................................................................

**10.** பிரக்சிடெலஸ் என்ற கலைஞரால் நிர்மாணிக்கப்பட்ட 'ஹர்மீசும் டயோனீசசும்' என்ற சிலை எக்காலப்பகுதிக்கு உரியது?

.................................................................................................................................

● 11 தொடக்கம் 15 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்து அதன்கீழ் கோடிடுக.

**11.** கண்டி தலதா மாளிகைக் கட்டடத்தொகுதிக்கு உரித்தான தனித்துவமான கட்டடக்கலைக் கூறு
(1) தலதா மனை (2) மகுல் மடுவ (3) பத்திருப்பு (4) நீராடும் மனை

**12.** அனுராதபுரத்தில் அசோக்காராமய விகாரைக்குரிய பங்குலிய சிலை,
(1) சமாதி நிலையில் அமைந்த இருந்தநிலை சிலையாகும்.
(2) மகாமேகவனத்திலுள்ள சமாதி சிலைக்குச் சமமானதாகும்.
(3) முத்திரைகளை வெளிப்படுத்தும் தனித்துவமான சிலையாகும்.
(4) தர்ம போதனை செய்யும் தன்மையை வெளிப்படுத்தும் சிலையாகும்.

**13.** பொலன்னறுவையின் முதலாம் சிவாலயம்,
(1) பல்லவர்களின் செல்வாக்குடன் வெட்டித் தயாரிக்கப்பட்ட கருங்கற்களினால் கட்டப்பட்டதாகும்.
(2) 10 ஆம் நூற்றாண்டில் சோழர்களினால் நிர்மாணிக்கப்பட்ட கோயில்களில் ஒன்றாகும்.
(3) சோழப் பேரரசனான ராஜராஜனின் மனைவியின் நினைவாகக் கட்டப்பட்டதாகும்.
(4) தென்னிந்திய கட்டடக்கலைப் பண்புகளுக்கமைய 13 ஆம் நூற்றாண்டில் நிர்மாணிக்கப்பட்டதாகும்.

**14.** பப்லோ பிக்காசோவின் 'குவர்னிகா' ஓவியத்தின் முழுமையான ஒழுங்கமைப்பு வெளிப்பாடாக அமைவது,
(1) மனிதர்களின் தனிமையும் வருந்துதலும் ஆகும்.
(2) யுத்தத்தின் கொடூரத் தன்மையும் பயந்த தன்மையும் ஆகும்.
(3) பிராணிகளினதும் மனிதர்களினதும் புலம்பல் ஆகும்.
(4) நியாயம் கோரி போராடுதலும் இறத்தலும் ஆகும்.

**15.** அஜந்தா ஓவியங்களில் 'கிம்புல்வத்புரத்திற்கு பாத்திரமேந்தி யாசகம் செய்ய வருகை தரல்' என்ற சுவர் ஓவியத்தில் புத்த பகவானின் உருவத்தை மிகப் பெரியதாகச் சித்திரிப்பதற்குக் காரணமாய் அமைந்தது
(1) தூரநோக்குக் கோட்பாட்டைப் பின்பற்றுவதற்காகும்.
(2) ஓவியத்தின் ஒருங்கிணைப்புக்குப் பொருத்தமான விதத்தில் காட்டுதலாகும்.
(3) புத்தபகவானின் உயர்ந்த நிலைமையை சித்திரிப்பதற்காகும்.
(4) ஓவியத்தில் காணக்கிடைக்கும் கட்டடக்கலையுடன் பொருந்தச் செய்வதற்காகும்.

● 16 தொடக்கம் 20 வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு சொல்லினதும் கருத்தை விளக்கும் வகையில் முழுமையான ஒரு வாக்கியம் வீதம் எழுதுக.

**16.** அல்பனா : .................................................................................................

**17.** முக்குறுக்கம் : .................................................................................................

**18.** ஹய்ரோகிளிப்ஸ் : .................................................................................................

**19.** கும்பம் : .................................................................................................


**20.** மரவாகனம் : .................................................................................................


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/
Department of Examinations - Sri Lanka

● **21** தொடக்கம் **25** வரையில் தரப்பட்டுள்ள ஒளிப்படப் பகுதிகளுடனான நெருங்கிய தொடர்பைக் காட்டும் உருவை, எதிரிலுள்ள **A, B, C, D, E** ஆகிய உருக்களிலிருந்து தெரிவுசெய்து, அதனைக் குறித்து நிற்கும் ஆங்கில எழுத்தினைப் **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

**21.**  (.........)  **A**

**22.**  (.........)  **B**

**23.**  (.........)  **C**

**24.**  (.........)  **D**

**25.**  (.........)  **E**

Department of Examinations - Sri Lanka

● **26** தொடக்கம் **30** வரையான ஒவ்வொரு வாக்கியத்திலுமுள்ள இடைவெளிக்குப் பொருத்தமான சொல் / சொற்களை இட்டுப் பூரணப்படுத்துக.

**26.** கண்டி திரித்துவ இறைபீடத்திலுள்ள ஓவியங்களுள் காயமுற்ற ஒருவருக்குச் சிகிச்சையளிக்கும் ............................................... என்ற ஓவியத்தின் மூலம் உணர்வுபூர்வமானதொரு சந்தர்ப்பம் சித்திரிக்கப்படுகின்றது.

**27.** 'இறுதி இராப்போசனம்' என்ற ஓவிய ஒருங்கிணைப்பின்போது இருளான சூழலில் இயேசுநாதர் உள்ளிட்ட குழுவினரை ஒளியூட்டமாக எடுத்துக்காட்டும் கோட்பாடு ............................................... எனப்படும்.

**28.** வேதனை, பயம், அச்சம், முயற்சி ஆகியவற்றைச் சித்திரிக்கும், ஹெலனிஸ்டிக் காலத்துக்குரிய ............................................... சிலை யதார்த்தபூர்வமான தன்மைக்கமைய மேற்கொள்ளப்பட்ட நிர்மாணிப்பாகும்.

**29.** புத்தபகவான் ஐந்து வகைத் துறவிகளுக்கு முதலாவது தர்ம போதனை நிகழ்த்திய சந்தர்ப்பத்தை இந்தியாவின் ............................................... சிலை சித்திரிக்கின்றது.

**30.** ஈரலிப்பான சாந்தின் மேற்பரப்பில் ஓவியங்களை வரையும் மரபுரீதியான கலைநுட்பம் ............................... எனப்படும்.



Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

● **31** தொடக்கம் **35** வரையுள்ள வினாக்களுக்கு **A, B, C, D, E** ஆகிய ஒளிப்படங்களை அடிப்படையாகக் கொண்டு விடை எழுதுக.



A



B



C



D



E

**31.** **A** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ஓவியப் பகுதி எந்த ஓவியத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது?

.................................................................................................................................

**32.** **B** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள மாறாத பக்தியால் உடற் பொலிவினை இழந்த பெண்ணின் சிலை என்ன பெயரால் அழைக்கப்படுகிறது?

.................................................................................................................................

**33.** **C** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சாஞ்சி தோரண செதுக்கலினால் சித்திரிக்கப்படும் தொனிப்பொருள் யாது?

.................................................................................................................................

**34.** **D** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள மனித முகத்துடன் விலங்கு உடலை இணைத்து உருவாக்கப்பட்ட கற்பனைச் சிலை எது?

.................................................................................................................................

**35.** **E** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள கேலிச்சித்திர (கார்டூன்) பாத்திரத்தை உருவாக்கிய கலைஞர் யார்?

.................................................................................................................................

● உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வர்ண ஓவியத்தை இனங்கண்டு, அதன் கலைப் பண்புகளைப் பகுப்பாய்வு செய்யும் விதத்தில் **36** தொடக்கம் **40** வரையில் தரப்பட்டுள்ள உப தலைப்புகளுக்கமைவாக பொருளுள்ள ஐந்து வாக்கியங்கள் எழுதுக. (தனிச் சொல்லினால் விடையளித்தால் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது).

**36.** கலைஞர் தொடர்பாக : ..........................................................................

..........................................................................

**37.** தொனிப்பொருள் தொடர்பாக : ..........................................................................

..........................................................................

**38.** ஒழுங்கமைப்பு தொடர்பாக : ..........................................................................

..........................................................................

**39.** வர்ணப் பயன்பாடு தொடர்பாக : ..........................................................................

..........................................................................

**40.** உணர்வு வெளிப்பாடு : ..........................................................................

..........................................................................

* * *

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**43 I**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Ord. Level) Examination, 2020

**චිත්‍ර I / சித்திரம் I / Art I**

- ප්‍රශ්න අංක **36** සිට **40** දක්වා ප්‍රශ්න සඳහා පිළිතුරු සැපයීමට පහත සිතුවම භාවිත කරන්න.

  வினா இலக்கம் **36** தொடக்கம் **40** வரையிலான வினாக்களுக்கு விடையளிப்பதற்கு கீழே தரப்பட்டுள்ள உருவப்படத்தினை பயன்படுத்துக.

  Use the following painting to answer the questions from No. **36** to **40**.



* * *



Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

# விடைகள் - பகுதி I

1. கடலாதெனிய

2. கணேஸ்வராச்சாரியார்

3. விஜயநகர

4. கருங்கல்

5. அடித்தளத்தில்

6. யாழி

7. உத்தரராமய சிலை / கல்விகாரைச் சிலை

8. துரைசாமி / தாவடியூர் மு. துரைசாமி

9. வார்ப்பு / உருக்கி வார்த்தல் / உலோக வார்ப்பு

10. கிரேக்க தொன்மைக் காலம் / செந்நெறிக் காலம் / தொல்சீர் யுகம் / கி.மு. 330 – 320

11. – 3
12. – 4
13. – 4
14. – 2
15. – 3

16. விளக்கின் அடியைச் சுற்றி அலங்காரத்துடன் செய்யப்படும் கோலம்

17. முன்னால் தெரியும் காட்சியை பெரிதாகவும் பின்னால் தெரியும் காட்சியை சிறியதாகவும் தோற்றமளிக்கும் விதத்தில் உருவங்களை வெளிப்படுத்துதல்

18. எகிப்திய அலங்கார எழுத்துருக்கள் / எகிப்திய ஆலயங்களிலும் கட்டடங்களிலும் காணப்படும் உருவங்களை அடிப்படையாகக் கொண்ட எழுத்து வடிவம்.

19. இந்துக்களின் உற்சவங்களில் மங்களகரமான தன்மையை எடுத்துக் காட்டுகின்ற அடையாளமாக கருதப்படுகின்றது / இந்து சமய உற்சவங்களில் பானையில் நீரையூற்றி இலைகளையும் தேங்காயையும் வைத்து மனித உடலை உருவகப்படுத்தும் அமைப்பு/இஸ்லாமிய பள்ளிவாசல்களில் நுளைவாயில்களுக்கு மேலாக உச்சியில் காணப்படும் வெங்காய வடிவிலான கட்டட அமைப்பு

20. இந்து ஆலயங்களில் விசேட நிகழ்வின் பொருட்டு இறை விக்கிரகங்களை தூக்கிச் செல்லும் மரத்தாலான அலங்காரமான விலங்கு / பறவை உருவங்கள்

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

21. - D
22. - E
23. - B
24. - A
25. - C

26. நல்ல சமாரியன்

27. கியரஸ் கியூரோ / கியூரஸ் கியூரோ (Chiaros curo)

28. லவகூன் / லகூன் சிற்பம்

29. சாராநாத்

30. ஈரச்சுதை / பிரஸ்கோ புவனோ

31. சங்கமித்தை வெள்ளரசு மரக்கிளையை இலங்கைக்கு கொண்டுவரும் காட்சியிலிருந்து

32. காரைக்காலம்மையார்

33. புத்தபகவான் சங்கிரஸபுரத்திற்கு வருகைதரல்

34. ஸபினிக்ஸ் / ஸ்பின்ஸ்

35. கமிலஸ்பெரேரா

36. M. சார்ளிஸ் அவர்களால் வரையப்பட்ட ஓவியம்

37. சித்தார்த்தரின் பிறப்பின் பின்னர் அவர் நடக்கும்போது தாமரை மலர் மலர்ந்தமையை புலப்படுத்துகின்றது.
– ஏழு தாமரை மலரில் எழுந்தருளல்

38. ஓவியத்தின் வெளியில் முன்னணி, பின்னணி, இடையணி ஆகிய தளங்களின் மீது தூர தரிசணப்பண்பிற்கு இசைவாக உருவங்கள் வரையப்பட்டுள்ளன. / ஓவிய வெளியில் ஆழம் புலப்படுமாறு தூர தரிசனப் பண்புகள் காட்டப்பட்டுள்ளது. / கருப்பொருளுக்கு மேலதிகமாக சமநிலை பேணப்படும் வண்ணம் காட்சி ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

39. முப்பரிமான இயல்பு வெளிப்படுமாறு வர்ணங்களின் இடைப்பட்ட தொனிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. / முப்பரிமானஇயல்பை வெளிப்படுத்த பல்வகைப்பட்ட நிறங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன./வர்ணப்பாவனை லித்தோ அச்சுப் பதித்தலுக்கு ஏற்றவாறு பயன்படுத்தப்பட்டுள்ளது.

40. சமய உணர்வுகள் வெளிப்படும் வண்ணம் ஓவியம் வரையப்பட்டுள்ளது. / பக்தியோடு இணைந்த மகிழ்ச்சி உணர்வு வெளிக்காட்டப்பட்டுள்ளது. / பௌத்த மத உணர்வுகள் மேலோங்கும் வண்ணம் பக்தியை வெளிப்படுத்தி உள்ளனர்.

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

**43 T II**

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2020**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2020**
**General Certificate of Education (Ord. Level) Examination, 2020**

| | | |
|---|---|---|
| චිත්‍ර II | | පැය දෙකයි |
| சித்திரம் II | | இரண்டு மணித்தியாலம் |
| Art II | | Two hours |

**முக்கியம் :**

* உங்கள் **சுட்டெண்ணை** விடைத்தாளில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் தெளிவாக எழுதுக.
* விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்கும்போது உங்கள் சித்திரம் நன்றாக உலர்ந்திருத்தல் வேண்டும். ஈரமான சித்திரங்கள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொள்ளுதல் உங்களுக்குப் பாதகமாக அமையலாம்.
* நீர்வர்ணம், போஸ்ரர் வர்ணம், கெட்டிச்சாயம் (டெம்பரா), பஸ்ரல் வர்ணம் உட்பட கையில் ஒட்டிக் கொள்ளாத எந்தவொரு வர்ண ஊடகத்தையும் பயன்படுத்த முடியும்.
* பொருட்களின் தொகுதியை 73 cm உயரமுள்ள மட்டமான மேசையிலோ அல்லது பலகையிலோ வைக்கும்படி பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

**சுயாதீன ரேகைச் சித்திரமும் வர்ணச் சித்திர ஒழுங்கமைப்பும்**

* உங்களுக்கு முன்னாலுள்ள பொருட்கூட்டத்தை நன்றாக அவதானிக்குக.

  **1.** பூர்வாங்க பரும்படிப் படத்தை முதலில் வரைக. இதற்காக உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வெள்ளைநிற A4 பருமட்டத் தாளைப் பயன்படுத்துக.

  **2.** பொருட்தொகுதி உங்களுக்குக் காட்சியளிக்கும் விதத்தில் வரைந்து வர்ணந்தீட்டுக. இதற்காக வழங்கப்பட்டுள்ள விசேட வரைதல் தாளைப் பயன்படுத்துக.

* **இரண்டு வரைதல்களையும் ஒன்றாக இணைத்து பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்குக.**
* உங்களது வரைதலை மதிப்பிடும்போது பின்வரும் விடயங்கள் கருத்திற் கொள்ளப்படும் என்பதைக் கவனத்திற் கொள்க.

● **சுயாதீன ரேகைக் கற்றல்**

**1.** பருமட்டத் தாளிலுள்ள பூர்வாங்கப் பரும்படிப் படத்தில், உரிய ஊடகத்தைக் கையாளும் திறன்கள் *(05 புள்ளிகள்)*

● **வர்ணச் சித்திரம்**

**2.** தளத்துக்கு உகந்ததாகப் பொருட்தொகுதி கலைநுட்பத்துடன் ஒழுங்கமைக்கப்பட்டிருத்தல் *(05 புள்ளிகள்)*

**3.** அளவிடைகள், தூரநோக்கு, முப்பரிமாண விளைவு பற்றிய விளக்கம் *(05 புள்ளிகள்)*

**4.** தரப்பட்டுள்ள பொருட்களின் வெளித்தோற்றப் பண்புகளை எடுத்துக்காட்டல் *(05 புள்ளிகள்)*

**5.** வர்ண ஊடகங்களைக் கையாளும் திறன் *(05 புள்ளிகள்)*

**6.** பொருத்தமான வர்ணப் பின்னணியும் ஒட்டுமொத்த பூரணப்பாடும் *(05 புள்ளிகள்)*

**மிக முக்கியம் :**

பொருட்தொகுதி வைக்கப்பட்டுள்ள பலகையைப் பெரிய அளவில் வரையத் தேவையில்லை. பலகையின் அளவைப் பொருட்தொகுதிக்குப் பொருந்தும் வகையில் மாற்றி வரைவதற்கு உங்களுக்கு அனுமதி உண்டு.

* * *

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

நோக்கம்:

1. இயற்கை செயற்கைப் பொருட்களின் இயல்பு வடிவமைப்புக்களின் தன்மைகளை விளங்கிக் கொள்ளும் திறன், கோட்பாடுகளை கையாளும் ஆற்றல்களை அளவிடுதல்.
2. இரேகை ஊடகத்தை உபயோகித்து பொருட்களின் இயல்புகள் வெளிப்படும் வகையில் வரைந்து காட்டும் திறன்களையும் ஒருங்கிணைப்புத் திறனை அளவிடுதல்
3. வர்ணத்தை பாவித்துக் கொள்ளும் நுட்பமுறை, பொருட்களின் புற இயல்புகள் வெளிப்படும் வகையில் வர்ணங்களை உபயோகிக்கும் திறனை அளவிடுதல்.

பத்திரம் 11இன் பொருட்டு பரீட்சார்த்திகள் அளித்துள்ள செயல்முறை சித்திரங்கள் இரண்டாகும்.இதில் ஒன்று இரேகை மூலம் பெறப்பட்ட கற்றல். மற்றையது வர்ணவாக்கமாகும். இவ்விரு ஆக்கங்களையும் மதிப்பீடு செய்தல் வேண்டும். இதன் பொருட்டு புள்ளி வழங்கும் திட்டத்தின் நியதிகளை உபயோகித்துக் கொள்ளவும்.



இரேகைக் கற்றல்.

இங்கு எதிர்பார்க்கப்படுவது பரீட்சார்த்தி தம் முன்னால் வைக்கப்பட்டுள்ள பொருட் கூட்டம் தொடர்பான ஆரம்ப இரேகைக் கற்றலாகும். சிலர் இதனை விளங்கிக் கொண்டு பகுதிகளாக கற்றுள்ள சந்தர்ப்பங்களை காணக்கூடியதாக இருப்பினும் சில பரீட்சார்த்திகள் தம் முன்னால் காணப்படும் பொருட்கூட்டத்தை முழுமையாக இரேகைச் சித்திரமாக வரைந்து காட்டுவர். ஏவ்வாறாயினும் இச்சித்திரத்தில் இரேகையை கையாளும் திறன்களை வெளிப்படுத்தல் வேண்டும். இதன் அடிப்படையில் பரீட்சார்த்தி இரேகைகள் தொடர்பாக வெளிக்காட்டி இருக்கும்.

நியதியின் அடிப்படையில் இவற்றுக்குரிய புள்ளிகள் ஐந்தில் (5) வழங்கக் கூடிய புள்ளிகளை (ஒவ்வொரு நியதியின் அடிப்படைக்கு ஏற்ப) தீர்மானித்துக் கொள்ளுதல் வேண்டும்.

வர்ணச் சித்திரம்

இங்கு பெரும்பாலும் பொருட்கூட்டத்தின் யதார்த்தத் தன்மையை கொண்ட வர்ணச்சித்திரம் ஒன்று வரைவதையே எதிர்பார்க்கப்படும். இதன் பொருட்டு புள்ளிகளை வழங்கும் நியதிகளின் கீழ் எதிர்பார்க்கப்படுகின்ற திறன்களைப் பரீட்சார்த்தி எவ்வளவு தூரம் அண்மித்துள்ளார் என அவதானித்து புள்ளிகளை தீர்மானித்துக் கொள்ளவும். இங்கு தத்தமது தனிப்பட்ட இரசனைகளுக்கு ஏற்ப சித்திரத்தை மதிப்பீடு செய்வதை தவிர்த்துக் கொள்வதுடன் பரீட்சார்த்தி வெளிக்காட்டியுள்ள திறனின் அடிப்படையில் மதிப்பீடு செய்தல் வேண்டும்.


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

## புள்ளி வழங்கும் நியதிகள்

| | | |
|---|---|---|
| 1. | இரேகைக் கற்றலின் போது சுதந்திரமாகவும் கருத்துடனும் இரேகையை கையாளுதல் தொடர்பாக வெளிக்காட்டப்பட்ட திறன். | 05 புள்ளிகள் |
| 2. | பரப்பினை கருத்துடன் உபயோகித்துள்ள திறன் | 05 புள்ளிகள் |
| 3. | பொருட்களின் பிரமாணம், இயல்புகளை வெளிப்படுத்தல் | 05 புள்ளிகள் |
| 4. | கோட்பாடுகளைப் பின்பற்றுதல தொடர்பான விளக்கம் (தூரதரிசனம், முப்பரிமான இயல்பு, கண்மட்டம்) | 05 புள்ளிகள் |
| 5. | வர்ணப்பாவனையும் புறவியல்புகளையும் வெளிப்படுத்திக் காட்டல் | 05 புள்ளிகள் |
| 6. | சித்திரத்தின் பொதுவான பூரணப்பாடு | 05 புள்ளிகள் |
| | பத்திரம் 11 க்கான முழுப்புள்ளிகள் | 30 புள்ளிகள் |

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**43 T III**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Ord. Level) Examination, 2020

චිත්‍ර III
சித்திரம் III
Art III

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**கவனிக்க :**

- ✳ நீங்கள் ஒரு சித்திரத்தை மாத்திரம் வரைய வேண்டும்.
- ✳ உங்கள் **சுட்டெண்ணையும்** உரிய **வினா இலக்கத்தையும்** விடைத்தாளில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் தெளிவாக எழுதுக.
- ✳ விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்கும்போது, உங்களது சித்திரம் நன்றாக உலர்ந்திருக்க வேண்டும். ஈரமான சித்திரங்கள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொள்ளுதல் உங்களுக்குப் பாதகமாக அமையலாம்.
- ✳ வர்ணந் தீட்டுவதற்கு நீர்வர்ணம், போஸ்ரர் வர்ணம், பெஸ்ரல் வர்ணம் உட்பட கையில் ஒட்டிக் கொள்ளாத எவ்வகை வர்ண ஊடகத்தையும் பயன்படுத்தலாம்.
- ✳ வரைவதற்கு வெள்ளைத் தாளும் தேவையானவர்களுக்குத் திசுத் தாளும் வழங்கப்படும்.

● அ, ஆ, இ ஆகியவற்றுள் ஏதேனுமொரு பகுதியிலிருந்து ஒரு தலைப்பை **மாத்திரம்** தெரிவுசெய்க.

### பகுதி அ - சித்திர ஒழுங்கமைப்பு

1. கடலில் புயற்காற்றுடன் போராடும் மீனவர்கள்
2. பாடசாலையின் சிறுவர் சந்தை / ‘ஆடும் புலியும்’ என்ற கிராமிய விளையாட்டு இடம்பெறும் சந்தர்ப்பம்
3. நீராடும் கிணற்றடியில் இடம்பெறும் ஓர் உரையாடல்
4. ஊருக்குள் புகுந்த யானைக் கூட்டமொன்று

### பகுதி ஆ - அலங்கார ஆக்கம்

5. சதுர வடிவான தழுவணை (Cushion) உறை ஒன்றுக்கான முழுத்தள அலங்காரமொன்றை மரபுரீதியான அலங்கார அலகுகளைப் பயன்படுத்தி $8 \times 8$ அங்குல அளவில் நிர்மாணிக்குக.
6. எட்டு இதழ்களைக் கொண்ட பூவொன்றைப் பயன்படுத்தி சீத்தைத் துணியொன்றுக்கான அச்சிடலுக்குப் பொருத்தமான பரவல் அலங்காரமொன்றை $9 \times 9$ அங்குலப் பகுதியில் நிர்மாணிக்குக. (பரவல் தொடர்பாகக் கவனம் செலுத்துக.)
7. பிராணிகளினதும் தாவரங்களினதும் வடிவங்களை அரூபரீதியாகப் பயன்படுத்தி $10 \times 7$ அடி அளவிலான வர்ணமயமான சுவர் அலங்காரமொன்றைத் திட்டமிடுக. (கடதாசியின் பரிமாணத்துக்கு ஏற்றவாறு திட்டமிடுக.)

### பகுதி இ - கிறபிக் சித்திரம்

8. ‘சுத்தமான கரங்கள் நம் அனைவரையும் பாதுகாக்கும்’ என்ற தலைப்பில் தொற்று நோய்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக கைகளைச் சுத்தமாக வைத்திருப்பதன் முக்கியத்துவம் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்குப் பொருத்தமான வர்ணமயமான சுவரொட்டி ஒன்றை நிர்மாணிக்குக.
9. தொழிலாளர்களின் உழைப்பை மதிக்கும் விதத்தில் எழுதப்பட்ட கவிதையொன்றுக்குப் பொருத்தமான வர்ணமயமான கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமொன்றை நிர்மாணிக்குக.
10. பிராணிகளினதும் மனிதர்களினதும் பாத்திரங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்படும் சிறுவர் கதைப்புத்தகம் ஒன்றுக்குப் பொருத்தமான வர்ணமயமான முகப்பு அட்டை ஒன்றை (முதற்பக்கத்தை மாத்திரம்) நிர்மாணிக்குக.

✳ ✳ ✳

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

## பத்திரம் 111 ‘ அ ‘ படவாக்கம்

நோக்கம் :-

‘சூழலில் காணப்படும் இயற்கை செயற்கைப் பொருட்களின் இயல்பு அவற்றிடையே நிகழ்கின்ற நிகழ்வுகள் செயற்பாடுகள் தொடர்பான அனுபவங்களை சித்திரத்தின் மூலம் வெளிப்படுத்துகின்ற ஆக்கச்சிறப்புடன் கூடிய ஆற்றலையும் நயத்தல் திறனையும் மதிப்பீடு செய்தல்.

இங்கு பரீட்சார்த்திகள் ஒவ்வொருவரும் தெரிவு செய்து கொள்ளும் தலைப்பிற்கு ஏற்ப வரைந்து கொள்ளும் போது பல்வேறுபட்ட மட்டங்களில் திறமைகளை வெளிப்படுத்தியுள்ளதை காணலாம். இரேகைகளைக் கையாண்டு வடிவமைப்புக்களை வெளிப்படுத்தும் பொழுது குறைந்த மட்ட திறமையும், உயர்மட்டத் திறமையும் வெளிப்படுத்தும் சந்தர்ப்பங்கள் உள்ளன.

மனித வடிவங்களை வரையும் போது இது போன்ற வேறுபாடுகளைளக் காணக்கூடிய சந்தர்ப்பங்கள் வரலாம். வர்ணப் பாவனையின் போது பல்வேறுபட்ட நுட்ப முறைகளை கையாண்டு உயர்மட்டத் திறனை வெளிக்காட்டுபவர்களிடையே செயன்முறைத் திறன் அற்றவர்களும் காணப்படுவர். ஆகையினால் ஒவ்வெரு பரீட்சார்த்திகளும் வெளிக்காட்டியுள்ள செயன்முறைத் திறனை இனங்கண்டு அதன் பிரகாரம் நியதிகளை அடிப்படையாகக் கொண்டு புள்ளிகளைத் தீர்மானித்து வழங்குதல் வேண்டும். இங்கு தனிப்பட்ட இரசனைகளுக்கு இடமளிக்காது புள்ளிகளை வழங்குக.

**புள்ளி வழங்கும் நியதிகள்**

| | | |
|---|---|---|
| 1. | தெரிவு செய்த தலைப்பிற்கு பொருத்தமான சூழலையும் நிகழ்வுகளையும் வெளிப்படுத்தியுள்ள தன்மை. | 06 புள்ளிகள் |
| 2. | மனித மெய்நிலைகள் பிராணிகள் உட்பட சகல வடிவமைப்புகளையும் தளத்தில் படவாக்கம் செய்துள்ள தன்மை | 06 புள்ளிகள் |
| 3. | இரேகைகள் வடிவமைப்புக்களில் காணப்படும் சிறப்புத் தன்மை | 06 புள்ளிகள் |
| 4. | வர்ண ஊடகத்தை உபயோகித்துள்ள திறன் | 06 புள்ளிகள் |
| 5. | பொதுப் ” ரணப்பாடு | 06 புள்ளிகள் |
| | பத்திரம் 111 அ பகுதிக்கான முழுப்புள்ளிகள் | 30 புள்ளிகள் |

Department of Examinations - Sri Lanka

## பத்திரம் 111 ‘ ஆ ‘ அலங்கார ஆக்கம்

**நோக்கம்:-**

அன்றாட வாழ்க்கையில் ஏற்படுகின்ற பல்வேறுப்பட்ட சந்தர்ப்பங்களும் தொடர்பாடல் செயற்பாடுகளும் தேவையான ஆக்கங்களைத் திட்டமிடுதல் அலங்கரித்தல் தொடர்பாக பரீடசார்த்தி பெற்றுள்ள திறன்களைப் பரீட்சித்தல்.

பத்திரம் 111ற்கு விடையளிக்கும் பொழுது அதிகமான பரீட்சார்த்திகள் ‘ ஆ ‘ பகுதியையே தெரிவு செய்கின்றனர் எனத் தெரிகின்றது. அவர்களிடையே பெரும்பாலானோர் கோட்பாடுகள் தொடர்பான விளக்கத்துடன் புதிய தன்மையில் அலங்கார ஆக்கங்களை நிர்மாணித்து உள்ளது போல் விளக்கமற்று அலங்கார ஆக்கங்களை நிர்மாணிப்போர் பலர் உள்ளனர். எவ்வாறாயினும் பரீட்சார்த்திகளின் ஆக்கங்களில் வெளிக் காணப்படுகின்ற அவர்களது ஆற்றல் திறமைகள் அவர்களது முன் அனுபவங்களின் அடிப்படையிலேயே அமைந்திருக்கும். அவர்களின் ஆக்கங்களின் திறமைகளை அவதானித்து புள்ளி வழங்கும் நியதிகளின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படுதல் வேண்டும்.


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

**புள்ளி வழங்கும் நியதிகள்**

| | | |
|---|---|---|
| 1. | தொனிப் பொருளுக்கு பொருத்தமான புதிய ஆக்கச் சிறப்புடையதாக திட்டமிட்டு கொள்ளும் திறன். | 06 புள்ளிகள் |
| 2. | பாவனைக்கு உகந்த வகையிலும் கைத்தொழிலுக்கு பொருத்தமுடையதாகவும் இருத்தல் | 06 புள்ளிகள் |
| 3. | இரேகை வடிவமைப்புக்களை கருத்துள்ள தன்மையில் உபயோகிக்கின்ற திறமை. | 06 புள்ளிகள் |
| 4. | பொருத்தமான வர்ணத் தேர்வும் உபயோகிக்கின்ற திறனும் | 06 புள்ளிகள் |
| 5. | அலங்கார அழகும் நிர்மாணிப்பின் பூரணப்பாடும். | 06 புள்ளிகள் |
| | பத்திரம் 111 ஆ பகுதிக்கான முழுப்புள்ளிகள் | 30 புள்ளிகள் |

## பத்திரம் 111 ‘ இ ‘ கிரபிக் சித்தரம்

**நோக்கம்:-**

விளம்பரம் அச்சிடல் வர்த்தக நோக்கு போன்றவற்றிற்கு அமைய திட்டமிட்டு வெளிப்படுத்தி உள்ளனரா என்பதை அறிதல்.

க.பொ.த.(சா/த) பரீட்சையில் புதிதாக சேர்க்கப்பட்ட பகுதியாகும். வகுப்பறையில் கற்ற விடயங்களையும் நுட்பங்களையும் சிறப்பு அம்சங்களையும் இப்பகுதி ஊடாக வெளிப்படுத்துவர்.

மதிப்பிடும் பொழுது தேர்ச்சி மட்டத்தை நன்கறிந்து புள்ளி வழங்கப்பட வேண்டும்.

**புள்ளி வழங்கும் நியதிகள்**

| | | |
|---|---|---|
| 1. | தலைப்புக்கு பொருத்தமான புதிய உத்திகளை பயன்கடுத்தி திட்டமிடல் | 06 புள்ளிகள் |
| 2. | தொடர்பாடல் காரியத்தின் வெற்றி | 06 புள்ளிகள் |
| 3. | வடிவங்களை ஒன்றிணைக்கும் போது கலையமசத்துடன் நிர்மாணித்தல் | 06 புள்ளிகள் |
| 4. | வர்ணத்தை தெரிவு செய்தலும் அதனை பயன்படுத்தும் விதமும். | 06 புள்ளிகள் |
| 5. | பல்வேறுப்பட்ட அழகு பிரபல்யமான நிர்மாணத்தின் சிறப்பியல்பு | 06 புள்ளிகள் |
| | பத்திரம் 111 இ பகுதிக்கான முழுப்புள்ளிகள் | 30 புள்ளிகள் |

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

விடைத்தாள் மீளாய்வு செய்யும் போது சில பரீட்சகர்களினால் செய்யப்பட்ட பாரதூரமான பிழைகள் பல அறிக்கைப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் பல உள்ளன.அவை போன்ற பிழைகள் ஏறபடாது பார்த்துக் கொள்ளுவது பரீட்சகர்களின் கடமையாகும்.

## அறிக்கைப்படுத்தப்பட்டுள்ள சில பிழைகள்.

1. சரியான சில விடைகளுக்கு பிழை என ( X ) குறிக்கப்பட்டும் பிழையான விடைக்கு ( ✓) எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.
2. சில விடைகளுக்கு சரி, பிழை (✓,X ) என எவ்வித குறியும் இடாமை.
3. விடைத்தாள் திருத்தும் பொழுது இடப்படும் (✓,X ) குறியீடுகள் விளக்கமற்று காணப்படுதல்.
4. புள்ளிகளை கூட்டும் போது ஏற்பட்டுள்ள பிழைகள்.
5. 11ம், 111ம் பத்திரத்து புள்ளிகளை முன்பக்கத்தில் பதியும் போது ஏற்பட்ட பிழை.
6. முன்பக்க புள்ளிகளை இறுதிப் புள்ளிப் பட்டியலில் உள்ளடக்கும் போது ஏற்பட்ட பிழை.
7. வினாப்பத்திரங்களுக்குரிய இறுதிப் புள்ளியைச் சுற்றி வட்டமிடாமை.
8. இறுதிப் புள்ளிகளில் காணப்படும் எண்கணிதப் பிழைகள்.
9. 11ம், 111ம் விடைத்தாள்கள் முறையாக மதிப்பிடப்படாத சந்தர்ப்பங்கள் அல்லது மிக உயர் தரத்தில் திறனினை வெளிப்படுத்திய விடைத்தாளுக்கு குறைந்த புள்ளியும், தரமற்ற பத்திரத்திற்கு கூடிய புள்ளிகள் வழங்கப்பட்டிருத்தல்.
10. திட்டமிட்டு சில விடைப்பத்திரத்திற்கு சித்தி, சிறப்புச்சித்தி வழங்கியுள்ளமை.

இது போன்ற பல தவறுகளை குறிப்பிட முடியும் இவற்றுள் பாரதூரமான தவறுகள் பகுதி 11, 111ல் ஏற்படுகின்ற மிகக் கூடிய குறைந்த மதிப்பீடாகும். இதனால் மீளாய்வின் போது பெருமளவு மாற்றங்கள் ஏறபட்டுள்ளது. எனவே பரீட்சகர்கள் மிகுந்த கவனம் எடுத்தல் வேண்டும். மேற்குறிப்பிட்ட விடயங்களைக் கருத்தில் பொண்டு மதிப்பீட்டுப் பணிகளை சிறந்த முறையில் செயற்படுத்தி புள்ளிப் பட்டியலை முறையாக தயாரித்துக் கொள்ளுவதன் மூலம் சிறப்பாக மதிப்பீட்டில் பங்களிப்புச் செய்தல் தேசியப்பணியாகும்.

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

## புள்ளி வழங்கும் திட்டத்தில் ஏற்படுத்துகின்ற மேலதிக மாற்றங்களும் குறிப்புக்களும்

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/